மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கடலூர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் வேலூரிலுள்ள மத்திய சிறைச்சாலைக்குத் தேவையான பொருட்களை செப்டம்பர் 1985-க்கு முன் சப்ளை செய்தது. ஆகவே, விவகார எல்லைக்கு அப்பாற்பட்டு இன்னொரு மாவட்டத்தைச் சேர்த்து செய்தது தவறு என்று கண்டு பிடிக்கப்பட்டு, அதற்குப் பிறகு. அப்படிப்பட்ட நிலைமைகளுக்கு ஆளாகக் கூடாது என்ற பிறகு எல்லா மாவட்டங்களினுடைய மொத்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் இனிமேல் அப்படிப்பட்ட அளவுக்கு. அந்த விவகார எல்லைக்கு உட்பட்டுதான் ஒப்பந்தப் புள்ளிகள் செய்ய வேண்டுமே தவிர, அந்த விவகார எல்லைக்கு அப்பாற்பட்டு எந்த ஒப்பந்தப் புள்ளிகளையும் எந்த மொத்தக் கூட்டுறவு விற்பனை சங்கமும் செய்யக் கூடாது என்று செய்யப்பட்டிருக்கிறது. எனக்குக் கொடுத்திருக்கிற குறிப்புகளின்படி அந்தக் கடலூர் கூட்டுறவுச் சங்கம் மீறி நடந்தது, இப்பொழுது தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது.

ஜெயங்கொண்டம் தொகுதி, தா. பழூரில் அமராவதி கூட்டுறவு பல்பொருள் அங்காடி.

368—(* வினா எண் 11300) டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதியில் உள்ள தா. பழூர் கிராமத்தில் அமராவதி கூட்டுறவு பல்பொருள் அங்காடி துவங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

1985, 1986 ஆண்டுகளில் இறந்த தமிழக அரசு ஊழியர்கள்.

369—(* வினா எண். 12485) திரு. எஸ். வேணுகோபால்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1985, 1986 ஆகிய ஆண்டுகளில் இறந்த தமிழக அரசு ஊழியர்கள் எத்தனை பேர்?